# "ஊக்கமூட்டும் ஒரு செய்தி" (13:14-43)

பவுலும் பர்னபாவும் பம்பிலியா நாட்டின் கடற்கரையிலிருந்து அபாயகரமான மலைப் பகுதிகளில் பயணம் செய்து வடக்கு நோக்கிச் சென்று, இறுதியாக பிசீதியாவின் அந்தியோகியாவைச் சென்று சேர்ந்தார்கள். இது பிசீதியாவின் எல்லைக்கருகில் பிரிகியாவில் இருந்தது. பிரிகியாவில் இருந்த மற்றொரு அந்தியோகியாவிலிருந்து வித்தியாசப்படுத்தப் படுவதற்காக இவ்வாறு அழைக்கப்பட்டது. சீரியாவின் அந்தியோகியாவைப் போலவே, இந்த அந்தியோகியாவும் செல்யூக்கஸ் நிக்கோடரால் அவரது தகப்பன் முதலாம் அந்தியோகியாவின் நினைவாகப் பெயரிடப்பட்டிருந்தது. கிழக்கு மேற்காகச் செல்லும் மிகவும் பிரசித்தமான வியாபார மார்க்கம் ஒன்றின் மீது அமைந்திருந்த இந்தப் பட்டணம் கலாத்தியாவின் அப்பகுதியில் குடிகள் மற்றும் இராணுவம் ஆகியோரின் மையப்பகுதியாக இருந்தது.

அப்பட்டணத்திற்கு அவர்கள் சென்றபின் வந்த முதல் ஓய்வு நாளில், பவுலும் பர்னபாவும் தங்கள் வழக்கத்தின் படியே, அப். 13:5; 14:1; 17:1, 2, 10, 17; 18:4, 19; 19:8 ஆகிய வசனங்களைக் காணவும். "ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, உட்கார்ந்தார்கள்" (13:14). ஆராதிப்பவர்கள் ஷேமாவை (கேள் என்பதற்கான எபிரெய வார்த்தை) உச்சரித்தபோது ஆராதனையானது தொடங்கியிருக்கும் (உபா. 6:4-9): "இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்!..." இதைத் தொடர்ந்து ஜெபம், நியாயப்பிரமாணத்திலிருந்து ஒரு வாசகம், மற்றும் தீர்க்கதரிசனத்திலிருந்து ஒரு வாசகம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டிருந்திருக்கும். அதன் பிறகு, வாசித்த வேதப்பகுதிக்கு விளக்கமும், பயன்பாடும் எடுத்துக் கூறும் நேரம் வந்திருக்கும். பாடமானது, வசனத்தை வாசித்தவரால் தரப்படலாம் (லூக். 4:16-20), அல்லது ஆராதனைக்குப் பொறுப்பாளரோ, அங்குள்ள வேறு ஆண்

*உறுப்பினர் யாராவது கூட இவ்விளக்கம் தரலாம்.*

*"நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகமமும் வாசித்து முடித்த பின்பு: சகோதரரே, நீங்கள் ஜனங்களுக்குப் புத்தி சொல்ல விரும்பினால் சொல்லுங்கள் என்று சொல்லும்படி ஜெப ஆலயத் தலைவர்கள் அவர்களிடத்தில் [பவுல் மற்றும் பர்னபாவினிடத்தில்] ஆளனுப்பினார்கள்" (13:15). பவுலுக்கும் பர்னபாவுக்கும் இந்த வாய்ப்புக் கொடுக்கப்பட்டது ஏன்? ஒருவேளை அந்த ஜெப ஆலயத்தில் பார்வையாளர்களுக்கு இவ்விதத்தில் மரியாதை கொடுப்பது வழக்கமாயிருக்கலாம். ஒருவேளை பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவில் பிரசங்கம் செய்திருக்கலாம், ஜெப ஆலய அதிகாரிகள் அவர்களின் உபதேசத்தின்மேல் ஆர்வமுள்ளவர்களாய் இருந்திருக்கலாம். ஒருவேளை இந்த ஆராதனைக்கு முன்பே இந்த இரு மனிதர்களையும் அவர்கள் சந்தித்திருக்கலாம், அப்போது பவுல் தாம் கமாலியேலிடம் படித்ததைக் கூறியிருக்கலாம். பவுலும் பர்னபாவும் ரபீக்கள் போன்ற தோற்றம் உடையவர்களாய் இருந்திருக்கலாம். காரணம் எதுவாயிருந்தாலும், அது இயேசுவின் தூதர்கள் புறக்கணிக்கக் கூடிய ஒரு வாய்ப்பாக இருக்கவில்லை.*

*அதிகாரிகள் "புத்தி சொல்லும்படி" கேட்டார்கள். "புத்தி சொல்லும்படி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "ஆறுதல்" என்று 4:36ல் (தேறுதல் கூறும்) இவ்வார்த்தை "தேறுதல்" கூறுதல் அல்லது "சாந்திப்படுத்துதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். மொழிபெயர்க்கப் பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையாக இருக்கின்றது (அங்கு பர்னபா "ஆறுதலின் மகன்" என்று அழைக்கப்பட்டார்).* NIV *யில், "சகோதரர்களே, மக்களுக்குக் கூற ஏதேனும் ஆறுதலான வார்த்தைகள் உங்களிடமிருந்தால், நீங்கள் பேசுங்கள்'' என்றுள்ளது. இப்பொழுது போலவே அப்பொழுதும் கால சூழ்நிலைகள் கடினமானவைகளாக இருந்தன, "ஆறுதலான ஒரு செய்தி" அன்றும் இன்றும் ஏற்புடையதேயாகும்.*

*அவர்கள் ஆறுதலான ஒரு செய்தியைக் கேட்டதால், ஆறுதலின் மகன் அதற்குப் பதில் தருவதே இயல்பானதா யிருந்திருக்கும். ஆயினும், பவுல்தான் பேசும்படி எழுந்தார். இப்பொழுது அவர் முன்னோடி என்று ஒப்புக் கொள்ளப் பட்டார்.*

*ஒரு பிரசங்கியாரிடம் நீங்கள் "ஒரு வார்த்தை" கூறும்படி கேட்டுக் கொண்டால் அநேகமாய் ஒரு பிரசங்கத்தையே நீங்கள் பெறுவீர்கள் - பவுலும் இதற்கு விதிவிலக்கு அல்ல. 13:16-41ல், பவுலின் பிரசங்கமாக முதல்முதல் பதிவான பிரசங்கத்தைக் காண்கின்றோம். பவுல் ஞானஸ்நானம் பெற்ற உடனேயே "தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் ... தமஸ்குவிலே குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான்" (9:20, 22). இங்கு முதன்முறையாக பவுலின் செய்திக்கான ஒரு மாதிரியை லூக்கா கொடுத்தார். இது யூதர்களின் ஜெப ஆலயங்களில் பிரசங்கிக்கப்பட்டவைகளுக்கு ஒரு மாதிரியாகும். பவுலின் தற்காப்பு வாதங்களையும் சேர்த்தால், அப். நட. புத்தகத்தில் அவருடைய ஐந்து பிரசங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*அந்தியோகியாவின் ஜெப ஆலயத்தில் பவுலின் பிரசங்கமானது இலக்கியத் தரமுடையதாயிருந்தது. பேச்சாளராகத் தொடங்குபவர்களுக்கு, ஒரு உரைக்கு மூன்று பாகங்கள் உண்டென்று கற்பிக்கப்படுகின்றது: முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரை. பவுலின் பிரசங்கத்தில் இம்மூன்றும் உள்ளன. தேர்ந்த பிரசங்கியார்கள், பிரசங்கத்தின் பொருட் பகுதியில் "மூன்று கருத்துக்களும் ஒரு கவிதையும்" இருக்க வேண்டும் என்று நகைச்சுவைக்காகக் கூறுவதுண்டு. பவுலின் பிரசங்கமானது இயல்பாகவே மூன்று பகுதிகளாகப் பிரிந்துள்ளது (அவை ஒவ்வொன்றும் "சகோதரரே" என்றோ அல்லது அதற்கிணையான வேறு வார்த்தையைக் கொண்டோ தொடங்குகின்றது), மற்றும் அவர் யூதர்களின் கவிதையிலிருந்து ஒரு மேற்கோளையும் காட்டினார்.*

*பவுல் அந்தியோகியாவின் குடிமக்களுக்குக் கொடுத்த ஆறுதலைக் காண்பதற்கு, அவரது "ஆறுதலின் செய்தியை" நாம் உற்று நோக்குவோம்-அது இன்றைக்கு நமக்குத் தரும் ஆறுதலையும் இதன் மூலம் நாம் காண்போம்.*

## தேவன் கட்டுப்படுத்துகின்றார்! *(13:16-25)*

*யூதர்கள், யூதமார்க்கத்தமைந்தவர்கள் மற்றும் தேவனுக்குப் பயந்தவர்கள் (தேவனை விசுவாசித்தவர்களாயிருந்தும், யூத*

*விசுவாசத்திற்கு மாறியிருக்காத புறஜாதியார்) ஆகியோருக்கு முன்பாகப் பவுல் நின்றார். அவர் தமது இயல்பான பண்பின் படியே மக்களின் கவனத்தைக் கவருவதற்காகக் கையமர்த்தினார் (21:40; 26:1ஐக் காணவும்), பின்பு பேசத் தொடங்கினார்: "இஸ்ரவேலரே, தேவனுக்குப் பயந்து நடக்கிற சகல ஜனங்களே, கேளுங்கள்" (வ. 16).*

*இன்றிருப்பவர்களைப் போலவே அன்றிருந்த மக்களும் தங்களைப் பற்றிய கருத்துக்களையே அதிக மகிழ்ச்சியுடன் அனுபவித்ததால், பவுல் முதலில், இஸ்ரவேலரிடத்தில் தேவன் நடப்பித்தவைகளை மறுகண்ணோட்டம் இட்டார்:*

> *இஸ்ரவேலராகிய இந்த ஜனத்தினுடைய தேவன் நம்முடைய பிதாக்களைத் தெரிந்து கொண்டு, எகிப்து தேசத்தில் அவர்கள் பரதேசிகளாய்ச் சஞ்சரித்தபோது ஜனங்களை உயர்த்தி, தமது புயபலத்தினாலே அதிலிருந்து அவர்களைப் புறப்படப் பண்ணி நாற்பது வருஷ காலமாய் வனாந்தரத்திலே அவர்களை ஆதரித்து, கானான் தேசத்தில் ஏழு ஜாதிகளை அழித்து அவர்களுடைய தேசத்தை இவர்களுக்குச் சுதந்தரமாகச் பங்கிட்டுக் கொடுத்து, பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷ காலமாய்[2] (வ. 17-20அ).*

*ஆலோசனைச் சங்கத்தாரின் முன்பாக ஸ்தேவான் செய்த பிரசங்கம் நமது நினைவுக்கு வருகின்றது, ஆனால் ஒரு வேறுபாடு இருந்தது: யூதர்கள் தேவனின் விடுதலையாளர்களை எப்பொழுதுமே புறக்கணித்தார்கள் என்று காண்பிக்க இஸ்ரவேலரின் வரலாற்றை ஸ்தேவான் மறுகண்ணோட்டமாய்க் கொடுத்தார்; பவுலோ, வரவிருந்த மேசியாவுக்கான ஆயத்தச் செயல்களாக இருந்ததைக் காண்பிக்கவே இஸ்ரவேலரின் வரலாற்றை மறுகண்ணோட்டமாகக் கொடுத்தார். வரலாற்றில் தேவன் கிரியை செய்து, அதைத் தமது நோக்கத்திற்கு ஏற்ற வகையில் உருவாக்கிக் கொண்டிருந்தார் என்று யூதர்கள் நம்பினார்கள்.*

*பவுல் அநேக நூறு வருடங்களை விரைவில் நுண்ணாய்வு செய்து தாவீதைப் பற்றிக் கூறலானார்:*

> *சாமுவேல் தீர்க்கதரிசி வரைக்கும் அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்தி வந்தார். அதுமுதல் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்;[3] அப்படியே*

தேவன் பென்யமீன் கோத்திரத்தானாகிய கீசுடைய குமாரனான சவுலை நாற்பது வருஷகாலமாய்[4] அவர்களுக்குக் கொடுத்தார். பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, "ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான்"[5] என்று அவனைக் குறித்துச் சாட்சியுங் கொடுத்தார் (வ. 20-22).

மேசியா, தாவீதின் நேரடித் தலைமுறையில் வருவார் என்பதை யூதர்கள் புரிந்திருந்தார்கள்.

இந்தக் கருத்து வரையிலும் பவுல் கூறியவைகளைக் கேட்டவர்கள் மனம் மகிழ்ந்து, பழக்கப்பட்ட மற்றும் பிரியமான வரலாறு கூறப்படுவதைக் கேட்டுத் தலையசைத்துக் கொண்டிருந்திருப்பார்கள். இப்பொழுது பவுல் அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியை வைத்திருந்தார்: "அவனுடைய [தாவீதினுடைய] சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே[6] இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப் பண்ணினார்" (வ. 23; இ.வ. மத். 1:1). கேட்டவர்கள் திகைப்புடன் நோக்கியதை என்னால் காணமுடிகின்றது. பவுலின் வார்த்தைகளில் இரண்டு அதிர்ச்சிகள் இருந்தன: முதலாவது, "தேவன் ... இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப் பண்ணினார்" என்பதில் உள்ள வினைச் சொல் அமைப்பும் ஆகும். மேசியாவைப் பற்றிய வாக்குத்தத்தம் நிறைவேறி விட்டது என்று பவுல் உரிமை கோரினார்! தாவீதின் சந்ததியாகக் குறிப்பிடப்பட்டவர் என்பது இரண்டாவது அதிர்ச்சியாகும். பவுலின் உரையைக் கேட்டவர்கள், அவர் "தேவன் இஸ்ரவேலுக்கு மேசியா என்ற ஒரு இரட்சகரை எழும்பப் பண்ணினார்" என்று கூறும்படியே எதிர்பார்த்தார்கள். அதற்கு மாறாகப் பவுல், ''தேவன் இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப் பண்ணினார்" என்று கூறினார்.

பவுல், அவர்களின் திகைப்பையும், பேசப்படாத அவர்களின் கேள்வியையும் காண முடிந்தது: இயேசு? யார் இந்த இயேசு?" யோவான்ஸ்நானனின் ஊழியம் பற்றி அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள் என்பதை அப்போஸ்தலர் அறிந்திருந்தார் (ஒருவேளை அவர்களில் சிலர் யோவான்ஸ்நானனின் ஊழிய நாட்களில் யூதேயாவுக்குச் சென்றிருக்கலாம். பின்னாளில் அப்பொல்லோ எபேசுக்குச் சென்றது

போல யோவானின் சீஷர்களில் ஒருவர் ஒருவேளை அந்தப் பகுதிக்கு வந்திருக்கலாம். 18:24-19-4). இப்பொழுது இயேசு யார் என்பதை அவர்களுக்கு நினைவூட்ட யோவானின் வார்த்தைகளை அவர் பயன்படுத்தினார் (மற்றும் இயேசுவே மேசியா என்பதற்கான தமது ஆதாரத்தையும் கூறத் தொடங்கினார்):

> தேவன் ... இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப் பண்ணினார். இவர் வெளிப்படுவதற்கு முன்னே மனந்திரும்பு தலுக்கேற்ற[7] ஞானஸ்நானத்தைக் குறித்து யோவான் இஸ்ரவேலர் யாவருக்கும் பிரசங்கித்தான். யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது: நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள், நான் அவர் அல்ல, இதோ, எனக்குப் பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றான் (வ. 23-25).

மேசியாவுக்கு வழியை ஆயத்தம் செய்வதற்காக யோவான் ஸ்நானன் "எலியாவின் ஆவியோடு" வந்தார் (மல்கி. 4:5, 6; லூக். 1:13-17; மத். 11:11-14; 17:10-13).[8] பவுலின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் யாரேனும், இதற்கு முன் யோவானின் உரையைக் கேட்டிருந்தால், அவர் (யோவான்) இயேசுவைக் குறித்துச் சாட்சி கொடுத்ததைக் கேட்டிருந்திருப்பார்கள்: "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி" (யோவா. 1:29)! யோவான் ஒரு தீர்க்கதரிசியென்றே அநேக யூதர்கள் விசுவாசித்தார்கள் (மத். 21:26); ஆகவே, அவரது வார்த்தைகளைப் பவுலின் உரையைக் கேட்டவர்கள் நினைவு கூர்ந்தால், இது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவே என்று நிரூபிக்க நல்ல ஒரு முன்னுரையாக இருக்கும்.

வரலாறு என்பது "தற்செயலாக நடைபெற்றது" என்று யூதர்கள் நம்பியிருந்ததில்லையென்று சற்று முன்னர் நான் குறிப்பிட்டேன்; வரலாற்றில் தேவன் கிரியை செய்து கொண்டிருப்பதாக அவர்கள் நம்பினார்கள்; அதை அவர் தமது நோக்கத்திற்கு ஏற்றபடி வடிவமைத்துக் கொண்டார் என்றும் அவர்கள் நம்பினார்கள். பவுல் தமது தொடக்கக் குறிப்புகளில், இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்புவதே தேவனுடைய

*நிறைவான நோக்கமாகும் என்ற விஷயத்தை அறிவிக்க இந்த சத்தியத்தின் மீதே கட்டியெழுப்பினார்.*

*உங்களைப் பற்றி நான் அறியவில்லை, ஆனால் வரலாற்றில் தேவன் கிரியை செய்கின்றார், தேவன் கட்டுப்படுத்துகின்றார் என்பதை நான் தைரியமூட்டும் ஒரு விஷயமாகக் காண்கின்றேன். நமது உலகமானது அடிக்கடி கட்டுப்பாட்டை இழந்து விடுவதாகக் காணப்படுகின்றது. 1996, ஏப்ரலில், ஒக்லஹாமா நகரில் உள்ள ஆல்ஃப்ரட் P. முர்ரா ஃபெடரல் கட்டிடமானது தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டு 169 பேர் கொலை செய்யப்பட்டனர், 400க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமுற்றனர். நான் வசிக்கின்ற பகுதியில் இந்த ஆண்டில் சபை உறுப்பினர்களில் இருவர் மதியீனமான முறையில் கொல்லப்பட்டனர் (கற்பழித்து கொலை செய்யப்பட்டனர்). இப்படிப்பட்ட வன்முறை நிகழும்போது நாம், "ஏன்?" என்று கதறுகின்றோம். ஒவ்வொரு கேள்விக்கும், நமக்குத் திருப்தியளிக்கும் வகையில் பதில் தர முடியாமல் போகலாம், ஆனால் நமது புரிந்து கொள்ளுதல் ஒரு எல்லைக்குள் இருந்த போதிலும், தேவன் கட்டுப்படுத்துகின்றார் என்று அறிவது நமக்கு ஆறுதல் தருவதாயிருக்கின்றது. "வரலாற்றை கிறிஸ்தவர்கள் தீமையிலும் நன்மையுள்ளதாகவே கண்ணோக்குகின்றார்கள். தேவனுடைய நோக்கத்தின்படியே வரலாற்றின் நிகழ்ச்சிகள் யாவும் நடக்கின்றதென்பது உறுதியானதாகும்'' என்று பார்க்ளே கூறுகின்றார். தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் நாம் நடந்து வந்தால் அவர் நமது துன்பங்களையும் கூட வெற்றியாக மாற்ற முடியும் என்று நாம் அறிந்திருக்கின்றோம் (ரோமர் 8:28).*

## *மேசியா வந்திருக்கின்றார்! (13:26-37)*

*ஜெப ஆலயத்தில் இருந்தவர்களின் கவனத்தைப் பவுல் பெற்றார். அவர், ''சகோதரரே, ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களே, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களே [அங்கிருந்த யாவரையும் குறிப்பிடுவதற்கு அவர் தமது கைகளை அசைத்திருப்பார்] இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது" (வ. 26). தேவன் தமது முற்றான நோக்கத்தில் அவர்கள் அனைவரையும் உள்ளடக்கியிருந்தார்!*

பவுல் தமது உரையை கேட்டவர்கள் "இந்த இரட்சிப்பின் வசனத்தை" ஏற்றுக்கொள்ளு முன்னர், தாம் மேற்கொண்டு ஜெயிக்க வேண்டிய பெரும் தடைகள் இருந்ததை அறிந்தார். அவர்களின் நிலையில் அவர் இருந்து கொண்டு, அவர்களின் தப்பெண்ணங்களைக்கூடப் பகிர்ந்து கொண்டிருந்தார்; அவரும்கூட தேவநம்பிக்கையற்ற அதே நிலையில் இருந்தார். "சிலுவையைப் பற்றிய இடறல்" (கலா. 5:11; இ.வ. 1 கொரி. 1:23) ஒன்றுதான் பெரிதும் அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது. யோவான் ஸ்நானன் குறிப்பிட்டவைகள், இயேசு யார் என்ற அவர்களின் நினைவை மெல்லத் தள்ளுமானால், பவுலின் உரையைக் கேட்டவர்கள் இயேசு பொதுவான ஒரு குற்றவாளி போலச் சிலுவையில் அறையப்பட்டதையும் நினைவுகூரக் கூடும். ரோமருடைய சிலுவை ஒன்றில் இயேசு தொங்கிய உண்மையானது, அவர் சபிக்கப்பட்டவர் என்பதற்கு ஆதாரமாயிருந்ததென்று அநேக யூதர்கள் கருதினார்கள் (உபா. 21:23; கலா. 3:13ஐக் காணவும்), ஆகவே அவர் மேசியாவாயிருக்க முடியாதென்றும் அவர்கள் கருதினார்கள். பவுல் இந்தப் பிரச்சனையைச் சந்தித்தார்.

> எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால் அந்த வாக்கியங்களை நிறைவேற்றினார்கள். மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள். அவரைக் குறித்து எழுதியிருக்கிறவைகள் யாவையும் அவர்கள் நிறைவேற்றின பின்பு, அவரை மரத்திலிருந்து இறக்கி,[9] கல்லறையிலே வைத்தார்கள்[10] (வ. 27-29).

இந்த வார்த்தைகளிலும், இதற்குப் பின்வரும் வார்த்தைகளிலும் நமக்கு, பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கம் நினைவுக்கு வருகின்றது, ஆனால் அடிப்படை வேறுபாடு ஒன்றுள்ளது: பேதுரு எருசலேமில், முன்னிலைப் பெயரில் பிரசங்கித்தார்: "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசு" (2:36). பவுல் எருசலேமிலிருந்து தொலைவில், படர்க்கைப் பெயரில் பிரசங்கித்தார்: "அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள்."

இயேசுவுக்கு நிறைவேற்றிய மரண தண்டனையானது ஏன் அவரை மேசியா என்ற நிலைக்குத் தகுதியற்றவராக்கவில்லை என்பதற்குப் பவுல் அடிப்படையான இரண்டு காரணங்களைக் கொடுத்தார்: முதலாவது, இயேசு மரணமடைவதற்குப் பாத்திரர் அல்ல. பவுல், "மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலை செய்யும் படிக்குப் பிலாத்துவை வேண்டிக் கொண்டார்கள்" என்று கூறினார். ஆலோசனைச் சங்கத்தார் இயேசுவின்மேல் தேவ தூஷணக் குற்றம் சாட்டினார்கள்; ஆனால் அவர் தேவகுமார னாயிருந்தால், அக்கூற்று தேவதூஷணமாகாது. பிலாத்து விசாரித்தபோது, இயேசுவின்மேல் சாட்டப்பட்ட குற்றமொன் றையும் அவர் அறியாதவராயிருந்தார் என்பதை அறிவித்தான். குற்றம் செய்ததினால் அல்ல மாறாக, யூதர்கள் வேண்டிக் கேட்டுக்கொண்டதால்தான் இயேசு மரிக்க வேண்டியதா யிருந்தது!

ஆயினும் இயேசுவுக்கு நிறைவேற்றிய மரணதண்டனை யானது அவரை மேசியா என்ற நிலைக்குத் தகுதியற்றவராக்க வில்லை என்பதற்கு அடிப்படையான காரணமாக, அவரது மரணமானது வேதவாக்கியங்களின் நிறைவேற்றம் என்பதே. பவுல், "எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியா மலும் [பவுல் பேசுவதற்குச் சற்று முன்பு கூட தீர்க்கதரிசன வசன மானது வாசிக்கப்பட்டிருந்தது], அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால் அந்த வாக்கியங்களை நிறைவேற்றினார்கள்" என்று கூறினார்; "அவர்கள் [அறியாமலே] அவரைக் குறித்து எழுதப்பட்டவைகள் யாவையும் நிறைவேற்றினார்கள்." இந்த இடத்தில் அநேகமாக, பவுல் சற்று நிதானித்து மேசியாவின் பாடுகள் மற்றும் மரணம் பற்றிய அநேக தீர்க்கதரிசன வசனங்களை - ஏசாயா 53 மற்றும் சங்கீதம் 22 போன்ற பகுதி களை-மேற்கோள் காட்டியிருப்பார். இயேசு சிலுவையில் அடைந்த மரணமானது அவரைத் தகுதியற்றவராக்குவதற்குப் பதில், மேசியாவாக அவரைத் தகுதிப்படுத்தியது.

பெருமளவில் பொதுவான மறுப்புக்குப் பதில் அளித்த பவுல், பிறகு உண்மையிலேயே இயேசுதான் மேசியா என்ப தைக் காண்பிக்கத் தொடர்ந்தார். மனிதர்கள் இயேசுவைப்

*புறக்கணித்தையும், தேவன் அவரை ஏற்றுக் கொண்டதையும் அவர் வேறுபடுத்தி ஒப்பிட்டுக் காட்டினார்; எருசலேமில் இருந்த யூதர்கள் அவர் மரிக்க வேண்டும் என்று கோரினார்கள். "தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்" (வ. 30). இயேசு மரித்தோரிலிருந்து எழும்பினார் என்று உறுதியாக அறிவிக்கப்பட்டபோது அங்கிருந்தவர்கள் அதிர்ச்சியுடன் தலை தூக்கியிருப்பார்கள்!*

*இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கு, அவர் உயிர்த் தெழுந்த பின் அவரைக் கண்ணால் கண்டவர்கள் ஏராளமான பேர் சாட்சியாக இருந்ததே பவுல் முன் வைத்த அடிப்படை ஆதாரமாயிருந்தது: "தம்முடனே கூடக் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு அவர் அநேக நாள்[11] தரிசன மானார்; அவர்களே ஜனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சி களாயிருக்கிறார்கள்" (வ. 31). அநேகமாய் இவ்விடத்தில் அவர் 1 கொரி. 15ல் செய்ததுபோல உயிர்த்தெழுந்த பிறகு இயேசு கொடுத்த தரிசனங்களில் சிலவற்றைப் பட்டியலிட்டிருப்பார். அப்படியிருந்தால், சந்தேகமின்றி அவர், "எல்லாருக்கும் பின்பு … எனக்கும் தரிசமானார்'' (1 கொரி. 15:8) என்று கூறி முடித்திருப்பார்.*

*இதன் பிறகு அவர், இயேசுவின் மரணம், அடக்கம் ஆகியவைகளைப் போலவே, அவரது உயிர்த்தெழுதலும் கூட தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகவே இருந்தது என்று காண்பித்தார்:*

> நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித் தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக் களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்ததை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு[12] நிறைவேற்றினார் என்று நாங்களும் [பவுலும் பர்னபாவும்] உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக் கிறோம்[13] (வ. 32, 33; சங். 2:7 ஐக் காணவும்).

*இஸ்ரவேலில் ஒரு புதிய அரசன் முடி சூட்டப்படும்போது பயன்படுத்தப்படும் ராஜரிக சங்கீதமாக இருந்தது, 2ம் சங்கீதம் ஆகும். ''ஜெநிப்பித்தேன்'' என்று இவ்விடத்தில் உள்ளது பிறப்பைக் குறிப்பிடவில்லை, ஆனால் புதிய அரசன் தேவனு டைய விசேஷித்த ''மகன்'' என்று அவரால் அடையாளப்*

படுத்தப்படுவதைக் குறிக்கின்றது. சங்கீதம் 2 மேசியாவைப் பற்றிய ஒரு சங்கீதம் என்றும், பூமிக்குரிய அரசர்களிடத்தில் இது பகுதி நிறைவேற்றம் பெற்றதென்றும், முழுமையாகவும், கடைசியாகவும் இது மேசியாவிடத்தில்தான் நிறைவேற்ற மடையும் என்றும் யூதர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். பவுல் அநேகமாக, மேசியாவின் முடி சூட்டுதலைப் பற்றிய வாக்குத் தத்தத்தை, அதற்கு முந்திய மேசியாவின் பாடுகள் மற்றும் மரணம் பற்றிய வாக்குத்தத்தத்துடன் இணைத்திருந்திருப்பார்: மேசியா மரித்து, அதன் பிறகு மகிமையினால் முடிசூட்டப்பட வேண்டியதாயிருந்ததென்றால், மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுதல் அவசியமாயிருந்தது. சங்கீதம் 2 ஐக் குறித்த பவுலின் விவாதத்திற்கு ரோமர் 1:5ல் உள்ள அவரது சொந்த வார்த்தை களே விளக்கவுரையாய் இருக்கின்றன: ''மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந் ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக் கிறார்.''

அடுத்தபடியாகப் பவுல் ஏசாயா 55:3 ஐக் குறிப்பிட்டார்: "இனி அவர் அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரி லிருந்து எழுப்பினார் என்பதைக் குறித்து: தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று திருவுளம்பற்றினார்" (வ. 34). தேவன் மேசியாவைத் தாவீதின் சிங்காசனத்தில் அமரப் பண்ணுவார் என்ற வாக்குத் தத்தத்தின் மையமாக ''தாவீதுக்கு அருளிய நிச்சயமான கிருபைகள்'' இருந்தன. இதற்கு முன்பிருந்தது போலவே பவுலின் விவாதம் இருந்தது: மேசியா மரித்து, பிறகு ஆளுகை செய்ய வேண்டுமானால், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் அத்தியாவசியமான ஒன்றாக இருந்தது.

பேதுரு பெந்தெகொஸ்தே நாளன்று பயன்படுத்திய அதே வசனப் பகுதி மற்றும் விவாதம் ஆகியவைகளைக் கொண்டு (சங். 16:10) பவுல் தமது விவாதத்தை முடித்தார்:

> ''அன்றியும், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காண வொட்டீர்'' என்று வேறொரு சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது. தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ் செய்த பின்பு நித்திரையடைந்து, தன்

> பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு, அழிவைக் கண்டான். தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை (வ. 35-37)

"உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்" என்று தாவீது கூறியபோது, அவர் தம்மையே குறிப்பிட்டிருக்க முடியாது, ஏனென்றால் அவரது சரீரம் அழிந்துவிட்டிருந்தது; ஆகையால் அவரது வார்த்தைகள், மேசியாவின் மரணத்துக்குப் பின்னும் மேசியாவின் சரீரம் அழிவைக் காணாது என்பதற் கான தீர்க்கதரிசனமாக இருந்தது-இது உயிர்த்தெழுதலை அவசியப் படுத்தியது (2:27க்கான குறிப்புகளை காணவும்).

பிறகு அநேகமாகப் பவுல் தமது கருத்தை ஆணித்தரமாய் உறுதிப்படுத்தினார்: மேசியா உயிர்த்தெழுந்து மகிமைப்பட வேண்டியிருந்ததாலும், இயேசுவின் விஷயத்தில் இது சரியா கவே நடந்திருந்தாலும், இயேசுவே மேசியா என்ற முடிவு தவிர்க்கவியலாததாகும், தப்பிக்க வியலாததாகும்!

மேசியா வந்திருக்கிறார் என்பதைக் காட்டிலும் அதிக ஊக்க மூட்டும் வார்த்தைகளை நான் அறிந்ததில்லை! காலைக் கதிரவன் காரிருளைக் கடிந்து விரட்டுவதைப் போல, இயேசு வைப் பற்றிய - அவர் தேவகுமாரன், அவர் இவ்வுலகத்தின் இரட்சகர் என்ற - உணர்வானது நமது இருதயங்களில் உள்ள இருளான உணர்வுகளை நீக்கவே வந்துள்ளது. தலைப்புச் செய்திகள் துர்ச் செய்திகளால் நிரப்பப்படலாம், ஆனால் நமது இருதயங்கள் நற்செய்தியால் நிரப்பப்பட வேண்டும்!

## நீங்கள் இரட்சிக்கப்பட முடியும்! (13:38-41)

பவுல் தமது பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர் களுக்குத் தமது செய்தியை நடைமுறைப்படுத்தத் தயாரானார்:

> ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவ மன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே[14] நீங்கள் எவைகளி னின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக் கூடாதிருந் ததோ, விசுவாசிக்கிறவன் எவனும்[15] அவைகளினின்று இவராலே[16] விடுதலையாகி[17] நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது (வ. 38, 39).

*நேர்மையுள்ள எந்த ஒரு யூதனும், "காளை வெள்ளாட்டுக் கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே'' (எபி. 10:4) என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிருந்தது. தீர்க்கதரிசியான எரேமியா, " 'இதோ, நாட்கள் வருமென்று' கர்த்தர் சொல்லுகிறார்; 'அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்' " (எரே. 31:31) என்று எழுதிய போது, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் இருந்த குறைபாடு களை ஒப்புக் கொண்டிருந்தார். பாவம் மன்னிக்கப்படும் என்பதும், அவர்களுக்கெதிராக அப்பாவமானது மறுபடியும் வைக்கப்பட்டிராது என்பதுமே புதிய உடன்படிக்கையின் (இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை [அல்லது ஏற்பாட்டின்]) பண்புகள் ஆகும்: " 'அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார் கள்' என்று கர்த்தர் சொல்லுகிறார்; 'நான் அவர்கள் அக்கிர மத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையா திருப்பேன்' " (எரே. 31:34ஆ).*

*கடைசியாக மனிதர்கள் யாவரும் விடுதலையாக முடிந்தது: பழைய பிரமாணத்தின் கட்டுப்பாட்டில் இருந்து மட்டுல்ல; ஆனால் பாவத்திலிருந்தும், குற்றத்திலிருந்தும் மற்றும் தேவன் விரும்புகின்றபடியான வகையில் இருப்பதற்காக மற்ற எல்லாவற்றிலும் இருந்தும் விடுதலையாக முடிந்தது! உங்கள் மனச்சாட்சியானது எப்போதாவது உங்களை இரக்கமற்ற வகையில் தண்டித்திருந்தால், நீங்கள் செய்த பாவங்களினால் எப்போதாவது ஒரு இரவு தூக்கமற்று இருந்திருந்தால், இது எவ்வளவு அற்புதமான செய்தி என்பதை நீங்கள் அறிவீர்கள்!*

*பவுலின் உரையைக் கேட்டவர்களுக்கு அது நற்செய்தியாக இருந்தது, ஆனால் தேவனுடைய தாராளமான அருளிரக் கத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், அவர் களுக்கு ஒரு துர்ச்செய்தியும் இருந்தது. பவுல் தமது "ஆறுதலின் செய்தியை" முடிக்கையில், "தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்திலே சொல்லியிருக்கிறபடி. ... உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' என்று கூறும்போது (வ. 40, 41) அவரது முகத்தில் தோன்றிய கவலை உணர்வை என்னால் காண முடிகின்றது. பவுல் பேசுவதற்கு முன் தீர்க்கதரிசனத் திலிருந்து ஒரு வாசகம் வாசிக்கப்பட்டது. அவரது உரையைக்*

கேட்டுக் கொண்டிருந்தவர்கள், தேவனையும் அவரது வழியையும் புறக்கணித்த அனைவர் மேலும் தீர்க்கதரிசிகள், தேவனுடைய சாபத்தைத் தொடர்ந்து கூறியதை நன்றாய் அறிந்திருந்தனர்.

"பேசப்பட்டவைகள்" குறித்து மேற்கோள் ஒன்றைப் பவுல், ஆபகூக்கின் புத்தகத்திலிருந்து எடுத்துக் கொடுத்தார்: "அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்து போங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்க மாட்டீர்கள்" (வ. 41; ஆபகூக் 1:5 ஐக் காணவும்). ஆபகூக்கின் நாட்களில் தேவன் தமது மக்களைத் தண்டிக்க புறஜாதி தேசம் ஒன்றை (பாபிலோன்) அனுப்புவதே தேவனுடைய பிரமிப் பூட்டும் "செயல்" ஆகும். இது சாத்தியமாகும் என்று இஸ்ர வேலர்கள் நம்பவில்லை - பாபிலோனியர்கள் அந்நாட்டைக் கைப்பற்றிய வேளையில் அநேகர் அழிந்து போயினர். ஆபகூக் கின் நாட்களில் தேவனுடைய பிரமிப்பூட்டும் செயல் ஒரு சாபமாக இருந்தது; பவுலின் நாட்களில், தேவனுடைய பிரமிப் பூட்டும் செயல் ஒரு ஆசீர்வாதமாக - மேசியாவை அனுப்பும் செயலாக - இருந்தது. இருப்பினும், அதன் விளைவு ஒன்று போலவே இருந்தது: தேவனுடைய செய்தியாளரை (பவுலை) நம்ப மறுக்கும் "அசட்டைக்காரர்" அழிந்து போவார்கள்!

பவுல், அச்சமயத்திற்குத் தமது "ஆறுதலின் செய்தியை" முடித்துக் கொண்டார். இயேசுவானவரே மேசியா என்று விசுவாசிக்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தி யிருந்தார், ஆனால் மனந்திரும்பும்படியாக அவர் கட்டளை யிடவில்லை அல்லது இயேசுவை அறிக்கையிட்டு, ஞானஸ் நானம் பெறுவதன் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறவில்லை.[18] இந்தத் தொடக்கக் கூட்டத்தில் அவர் அவர்களுடைய ஆர்வத்தை எழுப்பவும், சிந்தனையைத் தூண்டவும், தமது உரையைக் கேட்டவர்கள் விசுவாசத்தின் பாதையில் நடக்கத் தொடங்கவும் தேவையானவற்றைச் செய்ய முயற்சி செய்திருந் தார். இந்தக் குறிக்கோள்களை அவர் அடைந்து விட்டால், அதன்பிறகு ஏற்றுக் கொள்பவர்களை தொடர்ந்து ஊக்கப் படுத்தும் வகையில் இந்த அஸ்திபாரத்தின் மேல் அவர் கட்டியெழுப்ப முடியும்!

## முடிவுரை

இவைகளைக் காட்டிலும் அதிக உற்சாகமளிக்கும் சத்தியங்களை எவ்விதம் நாம் கற்பனை செய்ய முடியும்? வாழ்க்கைத் துயரில் மூழ்கிப் போயிருப்பவர்களுக்கு, "தேவன் கட்டுப்படுத்துகின்றார்!" என்று நாம் அறிவிக்கின்றோம். உறுதியற்ற தன்மையில் மூழ்கிப் போயிருப்பவர்களுக்கு, "மேசியா வந்திருக்கின்றார்" என்று நாம் அறிவிக்கின்றோம். பாவத்தில் மூழ்கிப் போயிருப்பவர்களுக்கு, "நீங்கள் இரட்சிக்கப்பட முடியும்" என்று நாம் அறிவிக்கின்றோம்.

பவுலின் பிரசங்கத்தை நாம் மறுபடியும் கண்ணோக்கினால் ஊக்கமூட்டும் இந்த சத்தியங்கள் யாவும் இயேசுவை மையமாகக் கொண்டிருப்பதை நாம் காண முடியும். ரிக் ஆட்ச்லீ அவர்கள், பவுலின் இப்பாடத்தின் முதல் பகுதியை, "இயேசு, வரலாற்றின் மையம்" என்றும் இரண்டாம் பகுதியை "இயேசு, தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்" என்றும், மூன்றாம் பகுதியை, "இயேசு, மீறுதல்களை மன்னிப்பவர்" என்றும் அழைத்தார். பின்னாளில் பவுல், "கிறிஸ்துவுக்குள் உள்ள ஆறுதல்" பற்றி எழுதினார் (பிலி. 2:1). உங்களுக்கு ஆறுதல் தேவையென்றால், இயேசுவுடன் நீங்கள் நெருங்கிய உறவு கொள்வது அவசியமாகும்!

நமது அடுத்த பாடத்தில் நாம், பவுலின் உரையைக் கேட்டவர்களின் பதில்செயலைக் காண்போம். ஆயினும், இவ்வேளையில் நான் உங்களின் பதில்செயல் பற்றி அதிக அக்கறையாய் இருக்கின்றேன். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இயேசுவை உங்கள் கர்த்தராக ஏற்றுக்கொண்டு, எல்லா வழிகளிலும் அவருக்கு உங்களை ஒப்புக்கொடுப்பது தேவையென்றால், அதற்கு இதுவே சரியான வேளையாகும்.

## பிரசங்கக் குறிப்புகள்

அப். 7ல் ஸ்தேவானுடைய பிரசங்கத்தில் செய்தது போலவே, அப். 13ல் பவுலினால் மறுபடி கூறப்பட்ட பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள், என்னுடைய வாசகர்கள் நன்கறிந்த வைகளே என்று நான் எண்ணம் கொண்டு, அவைகளை நான்

விவரிக்கவில்லை. உங்களின் உரையைக் கேட்பவர்கள் அவைகளை நன்கு அறியாதிருந்தால், பழைய ஏற்பாட்டுப் பின்னணியைத் தர நீங்கள் நேரம் ஒதுக்க விரும்பலாம். உங்கள் தயாரிப்பைத் தொடங்குவதற்காகப் பழைய ஏற்பாட்டின் குறிப்புகள் சிலவற்றை உள்ளடக்கியிருக்கின்றேன்.

---

குறிப்புகள்

*[1]இயேசு ஜெப ஆலயத்தில் உட்கார்ந்திருந்து பிரசங்கித்தார் (லூக். 4:20, 21), ஆனால் இவ்விடத்தில் பவுல் எழுந்து நின்றார் என்பது தெளிவாய்த் தெரிகின்றது. இந்த வேறுபாட்டிற்கான காரணத்தை நாம் அறியவில்லை. ஒருவேளை இயேசுவும் பவுலும் வித்தியாசப்பட்ட செய்திகளை, அவைகளைக் கட்டுப்படுத்தும் வித்தியாசப்பட்ட ''விதிகளின்'' கீழ் கொடுத்திருந்திருக்கலாம். ஒருவேளை பலஸ்தீனிய ஜெப ஆலயங்களின் ஒழுங்கு முறைகள் பலஸ்தீனத்திற்குப் புறம்பே இருந்த ஜெப ஆலயங்களின் ஒழுங்கு முறையிலிருந்து மாறுபட்டிருக்கலாம். [2]"ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷ காலமாய்" என்று மொழிபெயர்க்கப் பெற்ற, இந்த 450 வருடங்கள் என்பது எகிப்தில் தங்கியிருந்த ஆண்டுகள் (400), வனாந்தரப் பிரயா ணம் செய்த ஆண்டுகள் (40) மற்றும் நாட்டைக் கையகப்படுத்துதலில் செலவான ஆண்டுகள் (ஏறக்குறைய 10 ஆண்டுகள்) ஆகியவை சேர்ந்ததா யிருக்கலாம். [3]1 சாமு. 8:5-9. [4]சவுல் நாற்பதாண்டுகள் அரசாட்சி செய்தார் என்ற செய்தியானது பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. [5]இந்த மேற்கோள் இதே போன்று பழைய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை, ஆனால் இதன் சாராம்சமானது 1 சாமு. 13:14 லும் மற்றும் சங். 89:20லும் காணப்படுகின்றது. [6]2 சாமு. 7:12; சங். 132:11; ஏசா. 11:1-16. [7]யோவானின் ஞானஸ்நானமானது மனந்திரும்புதலை உள்ளடக்கி விளக்கியதால் "மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ் நானம்'' என்று அழைக்கப்படுகின்றது. பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானமானது இயேசுவில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை உள்ளடக்கி விளக்குவதால் ''விசுவாசத்திற்கேற்ற ஞானஸ்நானம்'' என்று அழைக்கப்பட முடியும். [8]யோவான் தாம் எலியா அல்ல (யோவா. 1:21) என்று கூறியபோது, மேசியா வருமுன் எலியா மரித்தோரிலிருந்து எழுந்து வருவார் என்று அநேக யூதர்களுக்குள் நிலவியிருந்த ஒரு பொதுவான நம்பிக்கையைக் குறித்துக் காட்டினார். யோவான் ஸ்நானன் "எலியாவின் ஆவியுடன்" வந்தவராயிருந்தாரே தவிர அவர் உயிர்த்தெழுந்த எலியாவாக இருந்ததில்லை. [9](தமிழில் உள்ளது போலவே) இவ்விடத்தில் ''மரத்தில்'' என்றுதான் மூலப் பிரதியிலும் உள்ளது. [10]இயேசுவின் விரோதிகள் அவரைச் சிலுவையில் அறைந்ததையும், இயேசுவின் நண்பர்கள் அவரை அடக்கம் செய்ததையும் பவுல் வித்தியாசப்படுத்திக் காட்டவில்லை. இந்தச் செயல்கள் யாவும் எருசலேமில் இருந்த யூதர்களால் செய்யப்பட்டன-இவை யாவும் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றின. [11]உயிர்த்தெழுந்த பின் இயேசு நாற்பது நாளளவும் தரிசனமானார் (1:3). [12]கிரேக்க மொழியில் ''பிள்ளைகளாகிய நமக்கு'' என்றுதான் உள்ளது. NIVயில் "அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டபோது அநேகமாக அது பவுலின் கருத்தை வெளிப்படுத்துவதற்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கும் (KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளைக் காணவும்).*

[13]"சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்" என்பது "சுவிசேஷம்" என்று பொருள்படும் ஒரே ஒரு கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். [14]வசனப் பகுதியில் ''நியாயப்பிரமாணத்திலே'' என்று மட்டுமே உள்ளது. [15]''எவனும்'' (ஒவ்வொருவரும்) என்ற வார்த்தையை விட்டுவிட வேண்டாம். புறஜாதியாரும் இதில் உள்ளடக்கப்பட்டனர்! [16]வசனப் பகுதியில் "இவரில்" என்றுள்ளது. பவுல் அவர்களின் மனங்களை ''கிறிஸ்துவுக்குள்ளாக்கும்'' ஞானஸ்நானத்திற்கு (ரோமர் 6:3; கலா. 3:27) ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். [17]"விடுதலையாகி" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது பெரும்பாலும் "நீதிமான்களாக்கப்பட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (KJV, NIV யில் காணவும்). [18]ஞானஸ்நானத்தின் அவசியத்தைப் பவுல் உறுதியாகவே நம்பினார் (ரோமர் 6:3, 4; கலா. 3:26, 27), ஆனால் தனது ஆரம்ப குறிப்புரைகளில் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கூற வேண்டியது அவசியம் என்று அவர் நம்பவில்லை என்பது தெளிவு. நான் யாரேனும் ஒருவருடன் வேதாகமத்தைப் படிக்கையில், முதல் முறை அமர்வின் போது இரட்சிப்பின் நிபந்தனைகளைக் குறிப்பிடுவது மிகவும் அரிது.